STATE SCHOOLS' RELIEF

2024 மற்றும் 2027 க்கு இடையில் Glasses for Kids (GFK) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குவதற்காக விக்டோரியா மாநில அரசு SSR உடன் மீண்டும் கூட்டிணைந்துள்ளது என்பதை State Schools' Relief (SSR) அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. தகுதியுடைய மாணவர்கள் தங்கள் தொடக்க ஆண்டுகளிலிருந்தே கல்வியில் முழுமையாகப் பங்கேற்க உதவுவதை உறுதி செய்வதன் மூலமாக GFK ஆனது, கல்வியில் ஈடுபடுவதற்குத் தடையாக இருக்கக்கூடிய பார்வைக் குறைபாட்டை நீக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. GFK 770 தொடக்க மற்றும் சிறப்புப் பள்ளிகளுக்கு வருகை தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 108,000 தொடக்கப் பள்ளி முதல் 3ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களை, இத்திட்டத்தின்போது ஆரம்பக்கட்டப் பார்வைச் சோதனைக்கு உள்ளாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. தேவைப்பட்டால், பங்கேற்கும் மாணவர்களுக்கு விரிவான கண் சோதனை மற்றும் கண்ணாடிகள் கட்டணமின்றி வழங்கப்படும்.

**QR குறியீட்டை ஸ்கேன் செய்து பார்க்கவும் Glasses for Kids காணொலி இங்கே**



## மேலும் தகவலுக்கு, இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்!

**லிசா மேக்கின்வென்**
திட்ட மேலாளர், Glasses for Kids
மின்னஞ்சல்: **glassesforkids@ssr.net.au**

**மாநிலப் பள்ளிகளின் நிவாரணம்**
PO BOX 4525
Dandenong South VIC 3164

STATE SCHOOLS' RELIEF

VICTORIA State Government | Department of Education

# GLASSES FOR KIDS

## குடும்பங்களுக்கான தகவல்



## Glasses for Kids (குழந்தைகளுக்குக் கண்ணாடி) நிகழ்ச்சித்திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?

- உங்கள் பள்ளிக்குச் சென்று, உங்கள் குழந்தைக்கு ஆரம்பப் பார்வைச் சோதனை செய்வதற்கும் தேவைப்பட்டால், கூடுதல் சோதனை செய்து கண்ணாடிகளை கட்டணமின்றி வழங்கக்கூடிய தகுதிவாய்ந்த பார்வை நிபுணர்களுடன், GFK கூட்டிணைந்துள்ளார்கள்.
- அனைத்து ஆரம்பகட்ட சோதனை, அடுத்தகட்ட சோதனை அமர்வுகள் பள்ளி நேரங்களில் செய்து முடிக்கப்படும்.

## எனது குழந்தை எவ்வாறு நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்ள முடியும்?

- ஒப்புதல் படிவம் மற்றும் பார்வை நிபுணர் கேள்விக்கொத்தை உரிய தேதிக்குள் உங்கள் பள்ளிக்கு திருப்பி அனுப்பவும்.

## எனது பிள்ளைக்கான சோதனை முடிவுகளை நான் எவ்வாறு பெறுவது?

- உங்கள் பிள்ளை வீட்டிற்குக் கொண்டுவர அவர்களின் பார்வைச் சோதனை முடிவுகள் பற்றிய கடிதத்தைப் பெறுவார்.

## என் குழந்தைக்கு கண்ணாடி தேவைப்பட்டால் என்ன செய்வது?

- பார்வை நிபுணர் உங்கள் குழந்தைக்கு கண்ணாடிகளைப் பரிந்துரைத்தால், GFK எந்தக் கட்டணமும் இன்றி உங்களுக்கு அவற்றை வழங்கும்.
- உங்கள் பிள்ளைக்கு கண்ணாடிகளைத் தேர்ந்தெடுத்து அன்றே பொருத்திக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.
- கண்ணாடி எதற்காகப் பரிந்துரைக்கப்பட்டன என்று உங்கள் பிள்ளைக்கு ஒரு கடிதம் வழங்கப்படும்.

## எவரெல்லாம் பங்கேற்கலாம்?

- தொடக்கப் பள்ளிகள்: பாலர் பள்ளி முதல் ஆண்டு 3 வரையிலான மாணவர்கள்.
- சிறப்புப் பள்ளிகள்: 5 முதல் 10 வயது வரையிலான மாணவர்கள்.

## தற்போது கண்ணாடி அணியும் குழந்தைகள் GFK இல் பங்குபற்ற முடியுமா?

- ஆம் அவர்களால் முடியும். அவர்களின் கண்ணாடிகள் பெறப்பட்டு 12 மாதங்களுக்கும் குறைவாக இருந்தால், அவர்களின் அண்மைய மருந்துச் சீட்டின் நகலைத் தயவுசெய்துவழங்கவும்.
- உங்கள் குழந்தை ஏற்கனவே வேறொரு பார்வை நிபுணரின் பராமரிப்பில் இருந்தால், பார்வை நிபுணர் வினாக்கொத்தில் ஏதேனும் தொடர்புடைய தகவலைப் பகிரவும்.

## ஒவ்வொரு குழந்தைக்கும் நான் தனித்தனி படிவங்களைத் திருப்பித் அனுப்ப வேண்டுமா?

- ஆம், ஒவ்வொரு மாணவரும் கையொப்பமிடப்பட்ட ஒப்புதல் படிவம் மற்றும் பார்வை நிபுணர் வினாக்கொத்தை வைத்திருக்க வேண்டும்.

## நான் மெடிகேர் விவரங்களை வழங்க வேண்டுமா?

- ஆம், வருகையின் நாளில் தேவைப்படும் எந்தவொரு சோதனைக்கும் மெடிகேர் மூலம் மொத்தக் கட்டண முறையில் (bulk bill) செலுத்தப்படலாம்.
- இருப்பினும், உங்கள் பிள்ளைக்கு மெடிகேர் அட்டை இல்லையென்றாலும், அவர்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கலாம்.

## கண்ணாடிகள் சேதமடைந்தால் என்ன செய்வது?

- முதலில் வழங்கிய சோடி 12 மாதங்களுக்குள் இருந்தால், GFK ஒரு (1) மாற்றீட்டை வழங்கும்.
- மாற்றுக் கண்ணாடிகள் சேதமடைந்தாலோ அல்லது தொலைந்துவிட்டாலோ, குடும்பங்கள் மற்றும்/அல்லது பள்ளிகள் SSR இலிருந்து கூடுதல் சோடி/களை வாங்கலாம்.

# Glasses for Kids திட்டத்தில் கலந்துகொள்ள 4 எளிய வழிமுறைகள் ...

1. குடும்பங்களுக்கான தகவல் சிற்றேட்டை வாசியுங்கள்
2. ஒப்புதல் படிவம் மற்றும் பார்வை நிபுணரின் (optometrist) வினாக்கொத்தைப் பூர்த்தி செய்யுங்கள்
3. இரண்டு படிவங்களையும் மீண்டும் பள்ளியில் கொடுங்கள்
4. வருகை தரும் நாளில் உங்கள் பிள்ளை பள்ளியில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

